[9th November 1961

டாகியிருக்கிறது. இதில் என்ன கஷ்டம் என்றால் கொடுக்கக் கூடாத நிலத்தையே கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்கள்—அதாவது டாங்க் பெட், சானெல் புறம்போக்கு இவைகளைக் கேட்கிறார்கள். முதலில் இல்லை என்றாலும் திரும்பவும் அதையே கேட்கிறார்கள். மற்றப்படி சல்லிசாகக் கொடுக்கக்கூடிய நிலத்தில் தாமதம் இல்லை.

SRI K. VINAYAKAM : Sir, did the threatened Satyagraha movement fructify and if so, what were the repercussions?

THE HON. SRI M. A. MANICKAVELU : There were no repercussions as it did not fructify.

SRI S. R. MUNUSAMI : ஸார், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற டி.ஸி. புறம்போக்கு நிலங்களில் சென்னசமுத்திரம் போன்ற இடங்களில் நிலத்திலே வேலம் விதைகளை விதைத்து வருகிறார்களே பஞ்சாயத்திலே, அதெல்லாம் ஆட்சேபணைக்குரியதா என்பதைச் சர்க்கார் தெரிந்து அதன் மீது நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது ஒரு தனிப்பட்ட விஷயம். இதைப்பற்றி குறிப்பாக எழுதி அனுப்பினால் அல்லது என்னிடம் சொன்னால் விசாரிக்கிறேன். பொதுவாக ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் ஹரிஜனங்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஒதுக்கப்படாத நிலம் ஹரிஜனங்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

Old age Pension

* 1942 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to grant old age pension for persons above 55?

THE HON. SRI C. SUBRAMANIAM : A scheme for the grant of pension to old and destitute persons is under the consideration of the Government.

* 1943 *Q.*—SRI T. T. DANIEL :
SRI M. P. SARATHI : } Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have decided to bring in legislation in regard to the payment of old-age pension for those above 60 years of age?

THE HON. SRI C. SUBRAMANIAM : The attention of the Member is drawn to the answer to question No. 1942 (Starred) by Sri A. A. Rasheed, M.L.A.

* 1944 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN** : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் வயோதிகர்களுக்கு பென்ஷன் கொடுக்கும் உத்தேசமுண்டா?

(இ) விவரமென்ன?

9th November 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) The & (இ) The attention of the Member is invited to the answer to question No. 1942 (Starred) by Sri A. A. Rasheed, M.L.A.

* 1945 Q.—**SRI S. M. ANNAMALAI :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எழுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு உதவிப்பணம் தரும் உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானல் ஒவ்வொரு நபருக்கும் எவ்வளவு தரப் படும் ? இதனுல் ஆகும் செலவு எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) & (இ) The attention of the Member is invited to the answer to question No 1942 (Starred) by Sri A. A. Rasheed, M.L.A.

SRI A. A. RASHEED : May I know the ' eligible age ' for these people, Sir?

THE HON. SRI C. SUBRAMANIAM : Under consideration, Sir.

SRI D. S. AUTHIMOOLAM : ஸார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்துக்கொள்ளவேண்டிய இந்த ஸ்கீமை கடந்த நான்காண்டு காலமாக அமுல் நடத்தாமல், அதற்கான நட வடிக்கைகளை எடுக்க சர்க்கார் முன்னுக்கு வராமல் இருந்ததற்குக் காரணமென்ன? மற்ற மாகாணங்களில் அமுல் நடத்தப்பட்டிருக் கிறதா என்பதையும் தயவுசெய்து சொல்ல முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அல்லது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய திட்டமல்ல. தனியாக எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டமாகும்.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்ற விவரத்தையாவது சர்க்கார் சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பரிசீலனை செய்து முடித்த பின்னர்தான் எவ்வளவு செலவாகும் என்று சொல்ல முடியும்.

SRI K. VINAYAKAM : What exactly is the connotation of the term 'destitute'? What are the requirements prescribed by the Government which these destitutes have to satisfy for becoming entitled to receive the pension, Sir?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the term, ' destitute ' is a very well-known word and I would refer the hon. Member to the Oxford Dictionary.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், ஏற்கனவே பத்திரி கையில் 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு, சாப்பாடு வசதி இல்லாதவர்களுக்கு 15 ரூபாய் கொடுப்பதற்கு ஒரு திட்டம்